CAMPAIGN | 100

LCIF • EMPOWERING SERVICE℠

Lions Clubs International FOUNDATION

**Lions Clubs International Foundation**
300 W. 22nd St. | Oak Brook, IL 60523-8842 USA
+1.630.571.5466 | **lcif.org/BE100 #BE100**

LCIF_C008_EN 9/18

LCI and LCIF are Equal Opportunity Providers

# CAMPAIGN | 100

LCIF • EMPOWERING SERVICE℠

Campaign 100 உங்கள் சேவைகளை
வலுவூட்டுவதற்காக
மூலதன நிதி திரட்டும் அமைப்பு



# பிரசார தலைவரின் செய்தி



சகலயன்களே,

சர்வதேச லயன்ஸ் கழக மன்றம் அதன் முதல் 50 ஆண்டுகளினுள் 1 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் 13,000க்கு மதிகமான திட்டங்களை செயற்படுத்தியதனூடாக லயன் சேவையை உலகளாவிய ரீதியில் வலுப்படுத்தியது.

கவர்ச்சிகரமானது, ஆனால் இது ஆரம்பம் மட்டுமே. நாம் பின்னோக்கிப் பார்க்கும் போது வாழ்க்கையின் மாற்றங்களுக்கான முயற்சிகளில் எமது மன்றம் அதை உங்களுக்கும் ஏனைய லயன்களுக்கும் சாத்தியமாக்கியுள்ளது.
அதேவேளை நாம் அடுத்த 100 ஆண்டுகளைப் பற்றியும் கவனம் செலுத்த வேண்டும். எனவே ஆரோக்கியமான எதிர்காலத்தை கண்ணோட்டமாகக் கொண்டு நாம் campaign 100 LCIF வலுவூட்டல் சேவையை 2018 சர்வதேச மாநாட்டில் பெருமையுடன் அறிமுகம் செய்கின்றோம்.

முன்னெப்போதும் நிகழ்ந்திராத 300 மில்லியன் மூலதன நிதி சேகரிப்பு முயற்சியின் முக்கிய நிகழ்வுகளில் பங்கேற்க உங்களை நான் அழைக்கிறேன்.

- தேவைகளை நாடும் உலகம்
- சேவைக்கான மன்றம்
- கண்ணோட்டத்துடனான பிரச்சாரம்
- அங்கீகாரம்: மாதிரிக் கழகங்கள் தலைமைத்துவத்துடன் வழிகாட்டுகிறது
  Campaign 100 இல் பங்கேற்றமைக்காக உங்களுக்கு எனது நன்றிகள்.

மன்றத்திற்காக நாம் செய்த சேவைகள், எமது தனிப்பட்ட நிதி உதவிகள் எமது மன்றத்தின் எதிர்காலத்தை அடுத்த 100 ஆண்டிற்கும் அதற்கப்பாலும் பிரகாசமாக்கும்.

உண்மையுள்ள,



ஜிட்சுஹிரு யமாடா
முன்னாள் சர்வதேச தலைவர்
Campaign 100 திட்டத்தின் பிரதானி



CAMPAIGN | 100

LCIF • EMPOWERING SERVICE℠

## 100% லயன்ஸ் அங்கத்தவர்கள் பங்களித்தால் என்ன செய்ய வேண்டும்?

### ஒவ்வொரு ஆண்டும் உங்கள் 100 அமெரிக்க டொலர் நன்கொடை உங்கள் சேவையை எவ்வாறு வலுப்படுத்துகிறது?

### உங்கள் எதிர்கால நடவடிக்கைகளுக்காக முதலீடு செய்யுங்கள்

100 ஆண்டுகளுள் சேவையில் ஈடுபட்ட லயன்ஸ் அங்கத்தவர்களால் பல மில்லியன் மக்களின் வாழ்க்கையை மாற்ற முடியும் என்பதையே நாம் நிரூபித்துள்ளோம். ஒவ்வொரு கழகத்தினதும் ஒவ்வொரு அங்கத்தவரினதும் உதவியுடன் எமது உலகளாவிய நோக்கங்களை விரிவாக்குவதற்காகவும் 2021ஆம் ஆண்டாகும்போது ஒவ்வொரு ஆண்டிலும் 200 மில்லியனுக்கும் அதிகமான மக்களுக்கு சேவை செய்வதற்கு லயன்ஸ் கழக சர்வதேச மன்றம் தயாராகின்றது. இவ்விலக்கை அடைவதற்காக Campaign 100 க்கு நீங்கள் வழங்கும் உங்கள் தனிப்பட்ட நிதி உதவி லயன்ஸ் கழக சர்வதேச மன்றத்தை வலுவூட்ட முக்கியத்துவம் வகிக்கும்.

உலகை மிகவும் ஆழ்ந்த அளவில் மாற்றுவதற்கு இன்றே நன்கொடை வழங்குங்கள்.

- பாதுகாப்பாக ஒரு முறை அல்லது தொடர்ச்சியான பங்களிப்பைச் செய்ய **lcif.org/BE100** ஐப் பார்வையிடவும், பிற நன்கொடை முறைகளைப் பற்றி அறியவும்.

- மேலதிக தகவலுக்கு +1.630.203.3836 அல்லது **donorassistance@lionsclubs.org** என்ற முகவரியில் LCIF நன்கொடையாளர் சேவைகளைத் தொடர்பு கொள்ளவும்.

## தேவைகளை நாடும் உலகம்

**245** பாதுகாப்பான மற்றும் மலிவான தடுப்பூசியினால் எளிதில் தடுக்கக்கூடிய தட்டம்மைநோயினால் ஒவ்வொரு நாளும் 245 பேர் இறக்கின்றனர்.

**800m** ஒவ்வொரு நாளும் 800 மில்லியனுக்கும் அதிகமானவர்கள் பசியுடனேயே உறங்குகின்றனர்.

**15%** ஒவ்வொரு ஆண்டும், இயற்கை பேரழிவுகள் 15 சதவீதத்தால் அதிகரிக்கின்றன. அப்பாவி மக்களின் வீடுகள், வேலைகள் மற்றும் உயிர் சூறையாடப்படுகின்றது.

**1/2** 2025 ஆண்டளவில், உலகின் அரைவாசி மக்கள் நீர் பற்றாகுறையுடனே வாழ்வர்.

**400m** 400 மில்லியன் மக்கள் நீரிழிவு நோயுடனே வாழ்கின்றனர் இவ் எண்ணிக்கை 2040ம் ஆண்டளவில் கிட்டத்தட்ட 650 மில்லியனாக உயரக்கூடும்.

**2min** ஒவ்வொரு இரண்டு நிமிடங்களுக்கும், ஒரு குழந்தையில் புற்றுநோயினால் பாதிககப்படுஇன்றது.

**253m** 253 மில்லியன் நபர்கள் பார்வையற்றவர்கள் 2050ம் ஆண்டளவில் இவ் எண்ணிக்கை மூன்று மடங்காகலாம் என உலகளாவிய போக்கு நிர்ணயிக்கின்றது.

**2/3** தற்போது சிறுவர் சனத்தொகையில் மூவரில் இருவர் துன்புறுத்தலின் தாக்கங்களுக்குள்ளாவதாக அறியக் கிடைக்கிறது

நமது சவால்கள் உயர்ந்தவை. தேவைப்படும் இடத்தில், ஒரு லயன்ஸ் சங்க அங்கத்தவர் இருக்கின்றார். தற்போது, நமது 100 ஆண்டுகால வரலாற்றில் முன்னெப்போதையும் விட, லயன்ஸ் அங்கத்தவர் சேவை புரிய எழ வேண்டும். நமது பணி தூய்மையானது, நம் கைகளும் இதயங்களும் தயாராக உள்ளன. இதுவே சரியான நேரம்.

Lions Clubs International
FOUNDATION

# சேவைகளுக்கான ஒரு மன்றம்

1917 ஆம் ஆண்டில், மெல்வின் ஜோன்ஸ் தனது சமூகத்தை மேம்படுத்த சிகாகோ தொழிலதிபர்களை ஒன்றிணைத்தார். 100 ஆண்டுகளுக்குப் பிறகு 1.4 மில்லியனுக்கும் அதிகமான லயன்ஸ் அங்கத்தவர்கள் தன்னார்வத் தொண்டு செய்வார்கள் என்று எமது ஸ்தாபகர் கற்பனை செய்திருப்பாரா? உலகின் மிகப் பெரிய சேவை அமைப்பு ஒரு நாள் முதன்மையாக தனது அன்புக்குரிய அமைப்பின் பெயரைக் கொண்ட ஒரு மன்றம் மூலம் நிதியளிக்கப்படும் என்பதை அவர் அறிந்திருப்பாரா? எமக்கு நிச்சயமாகத் தெரியாது. ஆனால் மெல்வின் ஜோன்ஸ் லயன்ஸ் சங்கத்தின் முதல் 100 ஆண்டுகளில் பெருமிதம் கொள்வார் எனவும், அடுத்து வரும் ஆண்டுகள் இதைவிட தாக்கம் செலுத்தும் என நம்பிக்கை கொள்வார் என்பதில் சந்தேகமில்லை.
50 ஆண்டுகளாக லயன்ஸ் சங்கத்தின் சேவையை மேம்படுத்தியமை - உங்களைப் போன்ற லயன்ஸ் அங்கத்தவர், நமது நண்பர்கள் மற்றும் பங்காளர்களிடமிருந்து பெறப்படும் நன்கொடைகளால் முழுமையாக நிதியளிக்கப்படுகிறது - இந்த மன்றம் 1 பில்லியன் அமெரிக்க டொலர்களை கீழ்காணும் நோக்கங்களை மையமாக கொண்டு 13,000 மானியங்களை வழங்கியுள்ளது:

லயன்ஸ் சேவையை வலுவூட்டுவதில் 50 ஆண்டு பூர்த்தியை கொண்டாடுவதோடு உங்களைப் போன்ற லயன்ஸ் அங்கத்தவர்களினதும், எமது நண்பர்களினதும், பங்காளிகளினதும் நன்கொடைகளினூடாகவே முற்றிலும் ஆரம்பிக்கப்பட்டது. முக்கியமான பிரிவுகள் நான்கை கவனத்தில் கொண்டே லயன்ஸ் கழக சர்வதேச மன்றத்தினால் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிக நிதி வழங்கப்பட்டது.

**பார்வை:-** எமது கண் பார்வை வேலைத்திட்டத்தின் கீழ் தவிர்க்கக்கூடிய குருட்டுத்தன்மையைத் தடுப்பதற்காகக் கண்புரை நீக்கும் சத்திர சிகிச்சைகளுக்காக 9 மில்லியனுக்கும் அதிகமாக வழங்கப்பட்டுள்ளது. 270 மில்லியனுக்கும் அதிகமாக ரோபல்ஸ் நோயாளிகளுக்கு சிகிச்சைக்காகவும் 3 மில்லியனுக்கு அதிகமான சுகாதார ஊழியர்களுக்கு பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளது.

**இளைஞர்கள்:-** லயன்ஸ் குவெஸ்ட் (Lions quest) திட்டத்தின் மூலம் சிறப்பு பயிற்சி பெற்ற கல்வியாளர்களால் சமூக மற்றும் உணர்திறன் கற்றல் நிகழ்சிகள்,உலகளாவிய ரீதியில் 16 மில்லியனுக்கும் அதிகமான இளைஞர்களுக்கு பயனளிக்கும் வகையில் நிகழ்த்தப்பட்டது.







| மாதிரி கழக பதவிகள் | அங்கத்தவ சராசரி (PMA) US$ | அங்கீகாரம் |
|---|---|---|
| பிரிமியர் மாதிரி கழகம் | $5,000+ | எழுத்து மூலமான மற்றும் போது அங்கீகாரம் மற்றும் பின்வரும் பயன்கள் |
| 600% மாதிரி கழகம் | $4,500 | பெனர் டொப்பர் மற்றும் பின்வரும் பயன்கள் |
| 500% மாதிரி கழகம் | $3,750 | |
| 400% மாதிரி கழகம் | $3,000 | |
| 300% மாதிரி கழகம் | $2,250 | எழுத்து மூல மற்றும் பொது அங்கீகாரம், சான்றிதழ், பேனர் பேட்ச் |
| 200% மாதிரி கழகம் | $1,500 | |
| தொலை நோக்குடைய மாதிரி கழகம் | $750 | |
| மாதிரிகழகம் | $500 | |

குறிப்பு: எழுதப்பட்ட அங்கீகாரத்தில் செய்திமடல், வலைத்தளம் மற்றும் பிற வாய்ப்புகள் உள்ளன. பொது அங்கீகாரத்தில் மாநாடு, உள்ளூர் மாநாடுகள் போன்றவற்றில் ஸ்க்ரோலிங் திரைகள் அடங்கும்.

# அங்கீகாரம்: முன்மாதிரியான சங்கங்கள் வழிநடத்துதல்

ஜுன் 30, 2021 க்குள் பிரச்சாரம் 100 வேலைத்திட்டத்தின் மூலதன இலக்கான 300 மில்லியன் அமெரிக்க டொலர்களை அடைவதற்கு, உலகெங்கிலும் உள்ள அனைத்து லயன்ஸ் அங்கத்தவர்கள் மற்றும் சங்கங்களின் பங்களிப்பு அவசியமாகும். வெகுமதி அளிக்க உற்சாகமான தனிநபர் மற்றும் சங்கங்களுக்கான அங்கீகார திட்டங்கள் உள்ளன. மாதிரி கழகங்கள் வழிநடத்தும்:

- இவை போன்ற உத்திகள் மூலம் நிதி திரட்டுதல்
  - தனிப்பட்ட உறுப்பினர்களிடம் பரிசு அல்லது நன்கொடை கேட்பது.
  - Campaign 100 வேலைத்திட்டத்திற்காக நிதி திரட்டும் நிகழ்வை ஏற்பாடு செய்வது.
  - சங்க திறைசேரியிலிருந்து LCIF க்கு பரிசு வழங்குதல்.
  - சமூகத்தின் உறுப்பினர்களிடமிருந்து பரிசு கேட்டல்.

- அவர்களின் Campaign 100 வேலைத்திட்டத்திற்கு நிதி திரட்டும் முயற்சியில் ஒரு உறுப்பினரிடமிருந்து சராசரி (PMA) குறைந்தது 750 அமெரிக்க டொலர்களாக சேகரிப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.
  ஒவ்வொரு லயன்ஸ் சங்க உறுப்பினரது நிதி ஆளுமைக்கேற்ப, தனிப்பட்ட உறுதிப்பாடு தொகையை பொறுத்து மூன்று முதல் ஐந்து ஆண்டுகளில் பூர்த்தி செய்யப்படலாம்.
- Campaign 100 வேலைத்திட்டத்தின் காரணிகளை ஊக்குவித்தல்.
- ஏனைய லயன்ஸ் சங்கங்களை மாதிரி சங்கங்களாக மாற ஊக்குவித்தல்.

உங்கள் கழகம் ஒரு மாதிரி கழகமாக மாறத் தயாராக உள்ளதா? மேலும் எமது உலகளாவிய காரணிகளை விரிவுபடுத்துவதற்கும் இன்னும் அதிகமான மக்களுக்கு சேவை செய்வதற்கும் உங்கள் மன்றம் உதவ வேண்டுமா? மாதிரி கழகம் என்ற நிலையை அடைவதன் பல நன்மைகளைப் பற்றி மேலும் அறிய, lcif.org/BE100 ஐப் நாடவும், உங்கள் கழகத்திற்கான LCIF ஒருங்கிணைப்பாளர் அல்லது மாவட்ட ஒருங்கிணைப்பாளரை தொடர்பு கொள்ளவும். அல்லது Campaign100@lionsclubs.org க்கு மின்னஞ்சல் செய்யவும்.

## மாதிரி கழக அங்கீகாரம்

பிரச்சார உத்வேகத்தை உருவாக்குவதில் மாதிரி கழகங்கள் முக்கியத்துவம் வகிக்கும். அவ்வாறு செய்வதற்கு வெகுமதி கொடுக்கப்படுகின்றது. Campaign 100 வேலைத்திட்டத்தின் மூன்று ஆண்டு காலப்பகுதில் குறைந்தபட்சம் ஒரு அங்கத்தவருக்கு சராசரி 750 அமெரிக்க டொலர் என்ற இலக்கை அடையவோ அல்லது பெருக்கவும் ஒரு மாதிரி கழகமாக இருப்பதற்கும் உறுதியளிக்க வேண்டும். மூன்று நிலைகளில் ஒவ்வொன்றையும் அடைந்தவுடன் உங்கள் கழகம் சிறப்பு அங்கீகாரத்தைப் பெறும்:

- மாதிரி கழக அர்ப்பணிப்பு படிவத்தை சமர்ப்பித்தல்
- பண நன்கொடைகள் அல்லது ஆவணப்படுத்தப்பட்ட உறுதிபாடுகளை LCIF க்கு சமர்ப்பிக்கப்படுவதன் மூலம் அறிவிக்கப்பட்ட PMA இலக்கை அடைதல்.
- ஏற்ற பொறுப்புக்களை நிறைவேற்றுதல்.



# லயன்ஸ் சங்கம் சர்வதேச அறக்கட்டளை குறிக்கோள்

உள்நாட்டு மற்றும் உலகளாவிய ரீதியல் சமூகங்களுக்காக பணியாற்றும் லயன்ஸ் சங்கங்கள் மற்றும் ஏனைய பங்காளர்களின் முயற்சிகளை ஆதரிப்பதும், மனிதாபிமான சேவை வேலைத்திட்டங்கள் மற்றும் மானியங்கள் மூலம் வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்தலும் நம்பிக்கையூட்டலும்.

**அனர்த்த நிவாரணம்** – இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட சமூகங்களின் உடனடி மற்றும் நீண்டகால தேவைகளுக்கு 118 மில்லியன் அமெரிக்க டாலருக்கும் அதிகமான தொகையை அனர்த்த நிவாரண மானியங்கள் மூலம் வழங்கியுள்ளது.

**மனிதாபிமான திட்டங்கள்** - மில்லியன் கணக்கான மக்களுக்கு, கல்வி, தொழில்நுட்பம், சுகாதாரம், விளையாடுவதற்கான பாதுகாப்பான இடங்கள் மற்றும் வாழ்க்கையை மாற்றும் பல மேம்பாடுகளை அணுகுவதற்கு உதவியமை.

லயன்ஸ் சங்கங்கள் உலகளாவிய ரீதியில் எமது முக்கிய சேவை துறைகளான நீரிழிவு நோய், பசி, குழந்தைப்பருவ புற்றுநோய் மற்றும் சுற்றுச்சூழல் தொடர்பான பிரச்சனைகளுக்கான தீர்வின் தாக்கத்தை அதிகரிக்க முயல்கையில், எல்.சி.ஐ.எ.ஃப் அவர்களின் சேவையை மேம்படுத்துகின்றது.

## LCIF – மானியங்கள் வழங்கல், லயன்ஸ் சேவைகளை மேம்படுத்தல்

LCIF இன் மையத்தில் லயன்ஸ் அங்கத்தவர் சிறந்ததையே செய்ய LCIF மானிய நிதியை வழங்குகின்றது.

- எங்கள் அடிமட்ட அணுகுமுறை, உலகளாவிய ரீதியில் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் லயன்ஸ் அங்கத்தவர் உள்நாட்டில் செயல்பட அனுமதிக்கிறது.

- அர்ப்பணிப்புடன் கூடிய தொண்டர் தலைவர்கள், ஆலோசகர்கள் மற்றும் பணிக்குழாம் பிரதானிகள் மேற்பார்வை செய்கின்றனர். தொடர்ச்சியாக நான்கு தடவை நான்கு நட்சத்திர புண்ணிய நிறுவன தரப்படுத்தலினூடாக லயன்ஸ் கழக சர்வதேச மன்றத்தின் செயற்றிறன், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் போன்றவை பிரதிபலிக்கின்றது.

- உலகம் பூராகவும் உள்ள பிரதான அமைப்புகளுடனான ஒத்துழைப்புடன் கூடிய பங்காளித்தன்மை லயன்ஸ் அங்கத்தவர்களின் பிரவேசத்தை விரிவாக்குகின்றது.

உலகளாவிய அடித்தளம்,
உள்ளூர் தாக்கம்



CAMPAIGN | 100

LCIF • EMPOWERING SERVICE℠

# லயன்ஸ் கழக சர்வதேச மன்றம் சேவைகளை வலுவூட்டல்

எமது உலகம் முகங்கொடுக்கும் சவால்கள் அதிகரிப்பது போன்றே அவற்றுக்கு எதிராகப் போராடும் ஆற்றலும் இருக்கவேண்டும். எதிர்காலத்தில் மிகப்பாரிய சேவைத் தாக்கத்தை ஏற்படுத்துவதற்காக லயன்ஸ் கழக சர்வதேச மன்றம் Campaign 100 வலுவூட்டல் சேவையைப் பொறுமையுடன் அறிமுகப்படுத்துகிறது.

லயன்ஸ் கழக சர்வதேச மன்றத்தின் வரலாற்றில் லட்சியமிக்க நிதி திரட்டும் முயற்சியான Campaign 100 திட்டம் மூன்று ஆண்டுகளாக செயற்படுவதோடு 300 மில்லியன் டொலர்களை சேகரிக்க முயற்சிக்கின்றது. 2021 ஜுன் 30ஆகும் போது Campaign 100 திட்டமூடாக ஒவ்வொரு ஆண்டிலும் 200 மில்லியன் மக்களுக்கு சேவை செய்வதற்காக லயன் அங்கத்தவர்களை வலுப்படுத்துவதோடு பின்வரும் வளங்கள் கிடைப்பதை உறுதிப்படுத்தும்.



## சேவைகளின் தாக்கத்தை அதிகரித்தல்

லயன்ஸ் கழக சர்வதேச மன்றம் எமது சமுதாயத்தின் மீதான லயன்களின் அர்ப்பணிப்பை விரிவாக்கும்.

**பார்வை** - தொற்று குருட்டுத்தன்மையை ஒழிப்பதற்கும், தவிர்க்கக்கூடிய குருட்டுத்தன்மை மற்றும் பார்வைக் குறைபாட்டைக் குறைப்பதற்கும், பார்வையற்ற அல்லது பார்வைக் குறைபாடுள்ளவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும் உலகளாவிய ரீதியில் வழிநடத்துவோம்.

**இளைஞர்கள்** - தரமான கல்வி, முக்கிய சுகாதார சேவைகள், அனைவரையும் உள்ளடக்கும் சமூக மற்றும் பொழுதுபோக்கு வாய்ப்புகள் மற்றும் சாதகமான இளைஞர் முன்னேற்றத்திற்காக இளைஞர்களுக்கு சேவை செய்வோம்.

**அனர்த்த நிவாரணம்** - அனர்த்த நிவாரண முயற்சிகளிலும், இயற்கை பேரழிவுகள் இடம்பெறும் எப்போதும், அவற்றுக்கு தயாராகுவதிலும் பதிலளிப்பதிலும் மும்முரமாக ஈடுபடுவோம்.

**மனிதநேய காரணிகள்** - முதியவர்கள், ஊனமுற்றோர், பெண்கள், அனாதைகள் மற்றும் சமூக, பொருளாதார காரணிகளால் வேறுபட்டு பாதிக்கப்படுவோர் வேறு அச்சுருத்தலுக்கு உள்ளாகக்கூடிய மக்களின் தனித்துவமான தேவைகளை நிவர்த்தி செய்யும் திட்டங்களுக்கு அனுசரணை வழங்குவோம்.



## நீரழிவு நோயை எதிர்கொள்ளல்

LCIF நீரிழிவு நோயைக் குறைப்பதோடு, இந்நோயால் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதம்.

நாம் வாழும் மற்றும் சேவை செய்யும் சமூகங்களை இலக்காகக் கொண்ட பன்முக, விரிவான சுகாதார முன்னெடுப்புகள் மூலம் உலகளாவிய ரீதியில் பெருவாரியாக காணப்படும் இந்நோயை ஒன்றாக எதிர்க்கொள்வோம்.



## எமது உலகளவிலான காரணிகளை விரிவாக்கல்

LCIF பாரிய தேவை மற்றும் வாய்ப்புக்கள் உள்ள துறைகளை அடையாளம் கண்டு நிபுணத்துவத்தை உருவாக்க முன்னோடி திட்டங்களை நடத்துதல் மற்றும் கீழ் காணும் காரணிகள் தொடர்பான நிலைபேண், நீண்ட கால திட்டங்களை கட்டியெழுப்புதல்.

**பசி** - பசியற்ற ஒரு உலகத்தை நோக்கி நாங்கள் செயல்படுவோம், உலகளவில் உணவு பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய தேவையான வளங்களையும் உள்கட்டமைப்பையும் விரிவுபடுத்துவோம்.

**குழந்தைப்பருவ புற்றுநோய்** - மருத்துவ மற்றும் சமூக சேவைகளை வலுப்படுத்தி, புற்றுநோயுடன் வாழும் குழந்தைகளின் ஆயுட்காலத்தை அதிகரிப்போம், அவர்களின் மற்றும் அவர்களது குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவோம்.

**சுற்றுச்சூழல்** – நமது உலகளாவிய சமூகங்களின் சுற்றுச்சூழல் ஆரோக்கியத்தை பாதுகாத்து, நீண்டகால, சாதகமான சுற்றுச்சூழல் தாக்கத்தை உருவாக்குவோம்.

## கெம்பெய்ன் 100 வேலைத்திட்டத்திற்கு நன்கொடை வழங்குங்கள்

1968 முதல், LCIF உங்களைப் போன்ற லயன்ஸ் அங்கத்தவர்களின் தனிப்பட்ட நிதி உதவிகள் மூலம் சேவை பணிகளுக்கு நிதியளித்துள்ளது. இன்றே நன்கொடை வழங்குங்கள். உங்கள் பங்களிப்பு 100% உங்களுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த கெம்பெய்ன் 100 வேலைத்திட்டத்தின் நிதியை ஆதரிக்கும்:

- சேவை நிதியை வலுப்படுத்தல், அனைத்து LCIF காரணிகளையும் ஆதரிக்கிறது
- அனர்த்த நிவாரண நிதி, அனர்த்த நிவாரணத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

**lcif.org/BE100** எனும் இணையத்தளத்திற்கு சென்று லயன்ஸ் சங்க சேவைகளை 100 ஆண்டுகளுக்கும் அதற்கு அப்பாலும் மேம்படுத்துக.